## இந்தியாவிலேயே விளையாட்டுத்துறை என்றால்,

# தமிழ்நாடுதான் என்கின்ற வகையில் முன்னேறுவோம்!

### திருப்பூரில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**திருப்பூர், ஜூன் 16–**

**திருப்பூரில், கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா, நடைபெற்றது. இதில் இளைஞர்நலன்மற்றும்விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கலந்து கொண்டு, திருப்பூர் மாவட்டத்தின் 265 கிராம ஊராட்சிகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கி சிறப்புரையாற்றினார். தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்திடும் வகையில், எண்ணற்ற விளையாட்டு வீரர்களை உருவாக்கி வரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் புதிய இலச்சினையையும் (லோகோ) வெளியிட்டார். அப்போது, 'தொழில் துறையில் சிறந்து விளங்கும் திருப்பூர் மாவட்டம், விளையாட்டுத் துறையிலும் சாதனை படைக்க தொடர்ந்து உறுதுணையாக இருப்போம்' எனவும், 'இந்தியாவிலேயே விளையாட்டுத் துறை என்றால் தமிழ்நாடுதான் என்கிற வகையில் முன்னேறுவோம்' எனவும் குறிப்பிட்டார்.**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த 265 ஊராட்சிகளுக்கு `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டை' வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 12 ஆயிரத்து 600 கிராம பஞ்சாயத்துக்களுக்கும் ரூபாய் 86 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்களைக் கொண்டுபோய் சேர்க்க வேண்டும் என்ற அடிப்படையில், இந்த `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்' திட்டத்தை கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் மதுரையில் தொடங்கி வைத்தோம்.

இதுவரை மதுரை, கோவை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள ஊராட்சிகளுக்கு கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டை வழங்கியுள்ளோம். இன்றைக்கு திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 265 ஊராட்சிகளுக்கு, கிரிக்கெட், வாலிபால், ஃபுட்பால், சிலம்பம் உள்ளிட்ட 33 வகையான விளையாட்டு உபகரணங்களைக் கொண்டு 410 கிட்ஸை இங்கு வழங்க இருக்கின்றோம்.

இந்த நிகழ்ச்சி மிகவும் முக்கியமான நிகழ்ச்சியும்கூட. ஏனென்றால், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் புதிய இலச்சினையையும் (லோகோ) உங்கள் முன்னிலையில் இன்றைக்கு நாங்கள் அறிமுகப்படுத்தி இருக்கிறோம். அதற்கும் நாங்கள் பெருமைப்படுகிறோம்.

**தடகள வீரர் – வீராங்கனை!**

இந்த திருப்பூர் மாவட்டம் தொழிற்துறைக்கு மட்டுமல்ல, விளையாட்டுத் துறைக்கும் பல முக்கியமான பங்கை அளித்துள்ளது. திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த தடகள வீரரான தம்பி தருண், 2016-ஆம் ஆண்டில் ரியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்று, நம் தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்தவர்.



ஆசிய அளவில் நடந்த போட்டிகளில் பல பதக்கங்களை வென்று, நம் தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்திருக்கிறார். அதுமட்டுமல்ல, 400 மீட்டர் தடை தாண்டும் போட்டியில் ஒன்றிய அளவில் பல சாதனைகளைச் செய்திருக்கிறார். அவருக்கு நம் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த தடகள வீராங்கனையான தங்கை பிரவினாவும் இங்கு வருகை தந்திருக்கிறார். அண்மையில், நடந்த `கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டி'யில் `ட்ரிப்பிள் ஜம்ப்' போட்டியில் தங்கப்பதக்கம் வென்று, தமிழ்நாட்டிற்குப் பெருமை தேடித் தந்தவர்தான் தங்கை அவர்கள். அதுமட்டுமல்ல, ஒன்றிய அளவில் நடந்த பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்று, திருப்பூருக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்தவர் அவர்.

**98 பதக்கங்கள்!**

நம் அனைவரின் சார்பாக இரண்டு பேருக்கும் நம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம். கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளை, இந்தியாவே திரும்பிப் பார்க்கும்படி, நாம் சென்ற வருடம் வெற்றிகரமாக நடத்தி முடித்துவிட்டோம். கேலோ இந்தியா இளையோர் போட்டியில், 38 தங்கப் பதக்கங்கள், 21 வெள்ளிப் பதக்கங்கள், 39 வெண்கலப் பதக்கங்கள் என 98 பதக்கங்களுடன் முதல் முறையாக தமிழ்நாடு பதக்கப் பட்டியலில் இரண்டாம் இடம் பிடித்தது.

அதற்கு முழுகாரணம் தமிழ்நாட்டிலிருந்து இங்கு வந்திருக்கக்கூடிய நீங்கள் தான். அடுத்தமுறை நிச்சயம் முதல் இடத்தைப் பிடிப்போம் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கிறது. நம் விளையாட்டு மேம்பாட்டுத்துறை எடுத்துவரும் முயற்சிகளைப் பாராட்டி சி.ஐ.ஐ. (Confederation of Indian Industries) என்ற அமைப்பு, சென்ற ஜனவரி மாதம் `பெஸ்ட் ஸ்டேட் ப்ரோமோட்டிங் ஸ்போர்ட்ஸ்' என்ற உயரிய விருதைக் கொடுத்து தமிழ்நாட்டைக் கௌரவப்படுத்தினார்கள். நம் முதலமைச்சரைக் கௌரவப்படுத்தினார்கள்.

அதேபோல் புகழ்பெற்ற பத்திரிக்கை 'தி இந்து ஸ்போர்ட்ஸ் ஸ்டார்' சார்பாக, 'பெஸ்ட் ஸ்டேட் - தி ப்ரோமோசன் ஆப் ஸ்போர்ட்ஸ்' என்ற விருதையும் நம் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும் கொடுத்து நம்மைக் கௌரவப்படுத்தியுள்ளார்கள்.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையைத் தொடங்கி, அதன்மூலம் ஏராளமான ஏழை, எளிய, மாற்றுத்திறன் கொண்ட விளையாட்டு வீரர்களுக்குப் பல்வேறு உதவிகளைத் தொடர்ந்து செய்து வருகின்றோம். இதுவரை 300-க்கும் மேற்பட்ட வீரர்களுக்கு ரூபாய் 6 கோடி அளவிற்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் மூலம் நிதி உதவி அளித்துள்ளோம்.

**'கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்'!**

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்களை வெல்லும் நம் வீரர், வீராங்கனைகளுக்குத் தொடர்ந்து, உயரிய ஊக்கத்தொகையை நம் முதலமைச்சர் அவர்களே தன் கரங்களால் வழங்கி வருகிறார்கள். இதுவரை சுமார் 700 வீரர்களுக்கு, ரூபாய் 17 கோடிக்கும் மேல் உயரிய ஊக்கத்தொகையாக நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

கேலோ இந்தியா யூத் கேம்ஸ், ஏசியன் கப் ஹாக்கி டோர்னமெண்ட், ஸ்குவாஷ் வேர்ல்டு கப், வேர்ல்டு சர்பிங் லீக் குவாளிஃபையிங் சீரிஸ், சைக்கிளத்தான், சென்னை செஸ் மாஸ்டர்ஸ்-2023, நேசனல் ஹாக்கி டோர்னமெண்ட் போன்ற பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தி வருகின்றோம்.

இந்தியாவிலேயே விளையாட்டுத் துறை என்றால், அது தமிழ்நாடுதான் என்கின்ற வகையில், தொடர்ந்து புதுப்புது முயற்சிகளை நம் துறையின் சார்பாக மேற்கொண்டு வருகிறோம்.

அதில், மிக முக்கியமானதுதான் இந்த 'கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்' வழங்குகின்ற இந்தத் திட்டம்.

**உடல் ஆரோக்கியம்!**

விளையாட்டுத்துறை வளர்ச்சி என்பது, நகரங்களில் மட்டும் தேங்கிவிடக்கூடாது என்பதற்காக கிராமங்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதற்கான முயற்சிதான், இந்த கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் வழங்கும் திட்டம். கிராமங்களிலிருந்து நிறைய விளையாட்டுத்துறை திறமையாளர்கள் வர வேண்டும் என்ற அடிப்படையில், கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இந்த விளையாட்டு உபகரணங்களைப் பயன்படுத்தி கிராமங்களில் இருக்கக்கூடிய இளைஞர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்தோடும், புத்துணர்ச்சியோடும் இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டில் அவரின் பெயரால் எத்தனையோ திட்டங்கள், அறிவிப்புகள் இருக்கின்றன. இருந்தாலும், விளையாட்டுத் துறையின் சார்பாக முதன்முறையாக கலைஞரின் பெயரில் ஒரு திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்றால் அது இந்த கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் என்ற திட்டம்தான்.

**விளையாட்டு வீரர்!**

கலைஞரின் பெயரை இந்தத் திட்டத்திற்குச் சூட்டியதற்கு மிக முக்கிய காரணம், ஒரு விளையாட்டு வீரனுக்கு இருக்க வேண்டிய அத்தனை குணாதிசயங்களும், திறமைகளும் கலைஞர் அவர்களுக்கு இருந்தன. அதுதான் அவரின் சிறப்பு. அதுவும் அவரின் நூற்றாண்டில் நாங்கள் நடத்தி வைப்பது, எங்களின் துறைக்குக் கிடைத்திருக்கக்கூடிய மிகப்பெரிய பெருமை.

இப்போது இங்கு வழங்கப்படுகின்ற விளையாட்டு உபகரணங்களைப் பயன்படுத்தி, நம் வீரர், வீராங்கனையர்கள் உங்களின் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். வெற்றி என்பது சுலபமாகக் கிடைக்காது. கலைஞர் அவர்கள் பல முறை சொல்லி இருக்கிறார். 'நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்' என்று.! எனவே, விளையாட்டுத்துறை மட்டுமல்ல, நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள எந்தத் துறையாக இருந்தாலும், அதில் வெல்ல வேண்டும் என்றால், இன்றைய இளந்தலைமுறையினர் அதற்காக உழைக்க வேண்டும்.

கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டை வாங்க வந்திருக்கக்கூடிய நீங்கள் ஒவ்வொருவரும் இந்த அரசின் முகமாக, முதலமைச்சரின் முகமாக, இந்த அரசின் அம்பாசிடராக நீங்கள் விளங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**நாற்பதுக்கு நாற்பது!**

இங்கு நம் அமைச்சர் வெள்ளகோயில் சாமிநாதன் அவர்கள் நன்றி தெரிவித்தார். காங்கேயம் தொகுதியில் மினி ஸ்டேடியம் அமைக்கப்பட்டு அந்த வேலைகள் நடந்து வருகின்றன. அதே நேரத்தில் அமைச்சர் கயல்விழிசெல்வராஜ் அவர்கள், அவரின் தாராபுரம் தொகுதிக்கு மினி ஸ்டேடியம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அதற்கான அறிவிப்பு, விரைவில் இந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார். இந்த நேரத்தில் அவருக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டபோது, கொடுத்த வாக்குறுதி, அதை நான் செய்துதான் ஆக வேண்டும். ஏனென்றால், மிகப் பெரிய வெற்றியை தாராபுரம் உட்பட தமிழ்நாட்டுக்கு 40-க்கு 40 என்ற மிகப்பெரிய வெற்றியை மக்கள் கொடுத்திருக்கிறார்கள். எனவே, கொடுத்த வாக்குறுதியை கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் செய்துகொடுப்பதால்தான் அந்தத் தொடர் வெற்றியை, தமிழ்நாட்டு மக்கள் நம் முதலமைச்சர் அவர்களுக்கு, நம் கழக ஆட்சிக்கு வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

**படிப்பு- விளையாட்டு!**

நம் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். நேற்று காலை அவரின் துறையின் சார்பாக ஐம்பெரும் விழா நிகழ்ச்சி நடந்தது. இந்த விளையாட்டுத்துறை நிகழ்ச்சிக்கு அவர் பள்ளிக்கல்வித்துறை அமைச்சராக இருந்தாலும், அவரை இங்கு அழைத்து வந்ததற்கு காரணம் குழந்தைகள் படிப்பதுடன் விளையாடவும் வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். அதற்காகத்தான் இங்கு அவரை அழைத்து வந்திருக்கிறேன்.

எப்படி கல்வி ஒரு குழந்தைக்கு முக்கியமோ, அதே அளவு முக்கியம் விளையாட்டு. நேற்று முதலமைச்சர் அவர்கள் பள்ளிக்கல்வித்துறை நிகழ்ச்சியில் பேசும்போது சொன்னார், 'நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படவேண்டாம். படியுங்கள் படிப்பு மட்டும்தான் உங்களிடம் இருந்து பறிக்க முடியாத சொத்து' என்று. அதேபோல் உங்கள் உடல்நலன், விளையாட்டுத்திறனையும் உங்களிடம் இருந்து யாரும் பறிக்க முடியாது. எனவே, முதலமைச்சர் சொன்னதைப்போல் 'கீப் ரன்னிங், கீப் வின்னிங், கீப் சைனிங், மேக் தமிழ்நாடு ப்ரௌடு' என்று கூறிக்கொண்டு, கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டை பெற்ற திருப்பூர் மாவட்டத்தின் அத்தனை ஊராட்சிகளின் முகங்களாக உள்ள மாணவர்கள், இளைஞர்கள் உங்கள் அத்தனைப்பேரையும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்சி அடைகின்றேன். இந்த கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டை உங்களிடம் வழங்குவதில், மிகுந்த பெருமை அடைகின்றேன். வந்திருக்கும் அத்தனை பேருக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கயல்விழிசெல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரசாமி, ஈரோடு பிரகாஷ், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., சட்டமன்ற உறுப்பினர் செல்வராஜ், மேயர் தினேஷ் குமார், மாவட்ட ஆட்சித் தலைவர் கிருஸ்துராஜ் ஐ.ஏ.எஸ்., விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., மாநகராட்சியின் ஆணையர் பவன்குமார் ஐ.ஏ.எஸ்., மாநகராட்சி மண்டல தலைவர்கள் இள பத்மநாபன், கோவிந்தசாமி, கோவிந்தராஜ், உமாமகேஸ்வரி,

சர்வதேச தடகள வீரர் ஒலிம்பியன் தருண் அய்யாசாமி, தேசிய தடகள வீராங்கனை பவினா, மாநகர காவல் ஆணையர் பிரவீன்குமார் அபிநவ், ஐ.பி.எஸ்., கழகத்தின் மாணவர் அணி தலைவர் ராஜீவ்காந்தி, இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் தங்கராஜ், ஜெயக்குமார், தமிழ்ராஜா மற்றும் கழக முன்னணியினர், இளைஞர் அணியினர் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

---

### குத்தகையை முறையாகச் செலுத்தாததால் – திருச்சி

# எஸ்.ஆர்.எம். ஹோட்டல் மீது நடவடிக்கை!

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தகவல்!

*சென்னை, ஜூன் 16 -*

*"குத்தகையை முறையாகச் செலுத்தாததால் திருச்சியிலுள்ள எஸ்.ஆர்.எம். ஹோட்டல் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தெரிவித்துள்ளது.*

*இதுகுறித்து தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-*

*திருச்சி மாவட்டம், கொட்டப்பட்டு கிராமத்தில் 4.70 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான பலகோடி ரூபாய் மதிப்புள்ள நிலம் எஸ்.ஆர்.எம். ஓட்டல் நிறுவனத்திற்கு, கடந்த 1994ஆம் ஆண்டில் 30 வருட காலத்திற்கு குத்தகை விடப்பட்டது. மேற்படி இடம் குத்தகைதாரருக்கு 14.6.1994 அன்று ஒப்படைக்கப்பட்டது.*

*இது தொடர்பாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் எஸ்.ஆர்.எம். ஓட்டல் நிறுவனம் ஆகிய இரு தரப்பினரும் சம்மதித்து கையெழுத்திடப்பட்ட இந்த குத்தகை ஒப்பந்தமானது கடந்த 13. 6.2024 அன்றுடன் முடிவடைந்து விட்டது.*

*1994ஆம் ஆண்டு குத்தகை வழங்கப்பட்ட அரசாணையின்படி, மேற்படி நிலத்திற்குச் சந்தை விலையின் அடிப்படையில், 7 சதவீதம் வருடாந்திர குத்தகைத் தொகை கணக்கிட்டு, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 30 ஆண்டு காலத்திற்கு குத்தகைத் தொகை ரூ.47,93,85,941/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.*

*ஆனால், இதில், நாளது தேதி வரை குத்தகைதாரர் எஸ்.ஆர்.எம். ஓட்டல் நிறுவனம் செலுத்திய தொகை ரூ.9,08,20,104/- மட்டுமே. மீதமுள்ள நிலுவைத்தொகையான ரூ.38,85,65,837/ஐ குத்தகை தாரர் இதுவரை செலுத்தவே இல்லை.*

*இவ்வாறு பல கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தில் 30 ஆண்டுகளாக முழுமையான குத்தகை தொகையைச் செலுத்தாமல் எஸ்.ஆர்.எம். நிறுவனம் தனது ஹோட்டலை தொடர்ந்து நடத்தி வந்துள்ளது.*

*குத்தகை ஒப்பந்தத்தில், மேற்படி நிலமானது 14.6.1994 முதல் 13.6.2024 வரையிலான 30 வருட காலத்திற்கு மட்டும் தான் குத்தகைக்கு விடப்படுகிறது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எக்காரணத்தை முன்னிட்டும் குத்தகைக் காலத்தை மேலும் நீட்டிக்க ஒப்பந்தக்காரர் கோரக் கூடாது என்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. குத்தகை முடியும் நாளில் குத்தகைதாரரால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு எவ்வித நிபந்தனையுமின்றி நிலம் மற்றும் கட்டடங்களை எவ்வித சேதாரமுமின்றி ஒப்படைக்க வேண்டும் என்றும் ஒப்பந்தத்தின் சாராம்சத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

**ஊடகங்களில் தவறான தகவல்!**

*மேலும் நிலுவைத் தொகையை செலுத்த 02.05.2024 நாளன்று (ஒரு மாத காலத்திற்கு முன்பாக) குத்தகைதாரருக்கு எழுத்துப்பூர்வமாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டது மட்டுமல்லாமல், குத்தகைக் காலம் 13.06.2024 அன்றுடன் முடிவடைகிறது என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மேலும் ஒப்பந்ததாரரால் நாளது தேதி வரை நிலுவைத் தொகை ரூ.38,85,65,837/- செலுத்தப்படாமல் இன்னும் நிலுவையாகவே உள்ளது. உண்மை நிலை இவ்வாறு இருக்க, சில ஊடகங்களில் எஸ்.ஆர்.எம். ஹோட்டல் சார்பாக தவறான மற்றும் உண்மைக்கு மாறான தகவல்கள் தெரிவிக்கப்பட்டு வருகிறது.*

*இந்நிலையில், குத்தகைக் காலம் முடிவடைந்ததாலும், குத்தகைதாரர் முறையாக, முழுமையான குத்தகைத் தொகையைச் செலுத்தாததாலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அரசாணை மற்றும் ஒப்பந்தத்தின்படிதான் முறையான நடவடிக்கையை எடுத்துள்ளது என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.*

*இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.*

---


### சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் கொண்டாடும்

## காலம் உள்ளவரை கலைஞர் - நூற்றாண்டு நிறைவு விழா!

### இன்றைய நிகழ்ச்சி – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

கலைஞர் 100 - 98

**இலக்கை வென்றாடுவோம்!**
**கிழக்கை கொண்டாடுவோம்!**



**நாள் : 16.06.2024, ஞாயிற்றுக்கிழமை, காலை 10 மணி**

**இடம் : திரு.வி.க.நகர் மாநகராட்சி மைதானம்.**

**தலைமை : ம.அசோக்குமார், அமைப்பாளர், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி**

**கால்பந்து போட்டியை துவக்கி வைப்பவர்**
**மனோ.தங்கராஜ், தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர்**

**அன்புடன்: மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி, கொளத்தூர் கிழக்கு பகுதி**

அமைச்சர் **பி.கே. சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.